தினமணி

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்**

First Published : 05 Oct 2010 11:17:37 AM IST

பழனி, அக். 4: பழனியை அடுத்த கீரனூரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கீரனூர் பஸ் நிலையம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தொப்பம்பட்டி ஒன்றியச் செயலாளர் ராமசாமி தலைமை வகித்தார்.

மாவட்டச் செயலாளர் சச்சிதானந்தம், பழனி நகர்மன்றத் தலைவர் ராஜமாணிக்கம், தொப்பம்பட்டி முன்னாள் ஊராட்சித் தலைவர் அருள்செல்வன் ஆகியோர் பேசினர். இதில், தொப்பம்பட்டியில் மக்காச்சோள கொள்முதல் மையம் அமைக்கவும், கீரனூரில் உள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்கு குடிநீர், கழிப்பிடம் மற்றும் மின் வசதி அமைத்துத் தரவும், அருந்ததியர் சுடுகாடு ஆக்கிரமிப்பை அகற்றி, சுற்றுச்சுவர் கட்டித் தரக் கோரியும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

**பவானிசாகர் அணை நீர்மட்டம்**

First Published : 05 Oct 2010 10:48:33 AM IST

ஈரோடு, அக். 4: பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 71.24 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 2,362 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. அணையிலிருந்து பாசனத்துக்கு வாய்க்காலில் விநாடிக்கு 1,800 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 11.48 டிஎம்சி.

**நவீன காய்கறி மார்க்கெட்: அழகிரி**

First Published : 05 Oct 2010 11:34:08 AM IST

மதுரை, அக்.4: மதுரையில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நிரந்தர காய்கறி மார்க்கெட் | 85 கோடியில், சுமார் 27 ஏக்கர் நிலப் பரப்பில் அமைய உள்ளதாக மத்திய ரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சர் மு.க.அழகிரி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மதுரை மக்களவைத் தொகுதியில் வேட்பாளராகப் போட்டியிட்டபோது நவீன காய்கறி மார்க்கெட் அமைக்கப்படும் என வாக்குறுதி அளித்திருந்தேன். இந்நிலையில், இதை முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன்.

இதை முதல்வர் பரிசீலித்து வேளாண் துறை அமைச்சருக்கு உத்தரவிட்டதன்பேரில், வேளாண் விற்பனை வாரியத்தின் மூலம் | 85 கோடி மதிப்பீட்டில் மாட்டுத்தாவணி பஸ் நிலையத்துக்கும், பூ மார்க்கெட்டுக்கும் இடையில் சுமார் 27 ஏக்கர் பரப்பளவில் அனைத்து தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நிரந்தர நவீன காய்கறி மார்க்கெட் அமைய உள்ளது.

இதற்காக, தற்போது | 30 கோடி நிதி ஒதுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு, 2012 மார்ச் மாதத்துக்குள் காய்கறி மார்க்கெட் கட்டி முடிக்கப்படும்.

மீதத் தொகை | 55 கோடியும் விரைவில் ஒதுக்கப்படும்.

இந்த காய்கறி மார்க்கெட்டில் காய்கறி, பழங்களைச் சேமித்து வைக்கலாம். இடைத்தரகர் இன்றி நியாய விலையில் விற்பனை செய்ய முடியும். நுகர்வோருக்கு தரமான காய்கறி மற்றும் பழங்கள் கிடைப்பதுடன், விவசாயிகளுக்கு கூடுதல் லாபமும் கிட்டும். புதிய வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளும் உருவாகும் என அழகிரி தெரிவித்துள்ளார்.

**செம்மை நெல் சாகுபடி பயிற்சி**

First Published : 05 Oct 2010 01:31:09 PM IST

மதுராந்தகம், அக். 4: செய்யூர் வட்டம் இந்தலூர் ஊராட்சியில் விவசாயிகளுக்கு செம்மைநெல் சாகுபடி குறித்த பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

÷திண்டிவனத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய தலைவர் ராமமூர்த்தி, திட்ட விஞ்ஞானி முனைவர் அன்புமணி ஆகியோர் நீர்வளம்-நிலவளம் திட்டத்தின் கீழ் செம்மைநெல் சாகுபடி குறித்த தொழில்நுட்பங்கள் மற்றும் சாகுபடிக்குத் தேவையான இடுபொருள்களான தரமான விதை, விதைப்பு சட்டம், உரம், பயிர் பாதுகாப்பு முறைகள், அரசு சார்பில் வழங்கப்படும் உதவிகள் உள்ளிட்டவை குறித்து எடுத்துரைத்தனர். செயல் விளக்கமும் நடைபெற்றது.

÷இப் பயிற்சி முகாமில் 70 விவசாயிகள் பயனடைந்தனர்.

**பருப்பு, கோதுமை கொள்முதல் விலை உயர்வு**

First Published : 06 Oct 2010 03:04:45 AM IST

புது தில்லி, அக்.5: பருப்பு மற்றும் கோதுமைக்கான கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. பருப்பு விலை குவிண்டாலுக்கு (100 கிலோ) 420 உயர்த்தப்பட்டுள்ளது. அதேசமயம் கோதுமை விலை குவிண்டாலுக்கு 20 உயர்த்தப்பட்டுள்ளது.

குறுவை சாகுபடி சீசனில் கோதுமைக்கான கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 20 உயர்த்தப்பட்டு 1,120-க்கு கொள்முதல் செய்யப்படும். இதேபோல பருப்பு விலை குவிண்டாலுக்கு 420 உயர்த்தப்பட்டு 2,250-க்கு கொள்முதல் செய்யப்படும்.

கடுகு விதை குவிண்டாலுக்கு 20 உயர்த்தப்பட்டு 1,850-க்கு கொள்முதல் செய்யப்படும். குறுவை சாகுபடி பயிர் கொள்முதல் விலை உயர்வு குறித்து பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை முன் ஒப்புதலுக்கு இந்த வாரத்தில் வைக்கப்படும்.

2010-11-ம் ஆண்டில் பருப்பு உற்பத்தியை 20 லட்சம் டன்னாக உயர்த்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. கடந்த ஆண்டு பருப்பு உற்பத்தி 16.5 லட்சம் டன்னாக இருந்தது. இந்த இலக்கை எட்டுவதற்காக சம்பா பருவத்தில் குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டது. இதேபோல குறுவை சீசனிலும் ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது. சம்பா பருவத்தில் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டதால் பருப்பு உற்பத்தி அதிகரித்தது. முந்தைய ஆண்டு இதே சீசனில் 4.3 லட்சம் டன்னாக இருந்த பருப்பு உற்பத்தி கடந்த சம்பா பருவத்தில் 6 லட்சம் டன்னாக உயர்ந்தது.

உலகிலேயே மிக அதிக அளவில் பருப்பு உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆண்டுதோறும் 40 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்யப்படுகிறது. உள்நாட்டு தேவையை ஈடுகட்டவும், விலை உயர்வைத் தடுக்கவும் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.உணவுப் பணவீக்கம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் கோதுமைக்கான ஆதரவு விலை கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

வேளாண் பொருள் விலை நிர்ணயக் குழு பரிந்துரை அடிப்படையில் குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது.

தினமலர்

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் உரிமம் ரத்து: வேளாண் அதிகாரி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,01:33 IST

திருவண்ணாமலை: "கூடுதல் விலைக்கு உரம் விற்றால் கடையின் உரிமம் ரத்து செய்யப்படும்' என வேளாண் உதவி இயக்குனர் (உரக்கட்டுப்பாடு) ஹரிகுமார் எச்சரித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை: திருவண்ணாமலை மாவட்டத்தில் தற்போது பருவ மழை துவங்கியுள்ளது. ரபி பருவ சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளின் நலன் கருதி, விவசாயத்துக்கு தேவையான உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் கையிருப்பு உள்ளன.தனியார் உர விற்பனையாளர்கள் உரிய உரிமத்தை புதுப்பிக்காமல் விற்பனை செய்வது தெரியவந்தால் உரிமம் ரத்து செய்யப்படும். உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்து வாங்கும் விவசாயிகளுக்கு உரிய விற்பனை ரசீது வழங்க வேண்டும். மேலும் விலைப்பட்டியலை கடை தகவல் பலகையில் எழுதி வைக்க வேண்டும். கூடுதல் விலைக்கு உரம் விற்பது கண்டுபிடிக்கப்பட்டால், கடையின் உரிமம் ரத்து செய்யப்படும்.

அரசு நிர்ணயித்துள்ள விலையைவிட கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்வது தெரிந்தால், திருவண்ணாமலை வேளாண் இணை இயக்குனர் மொபைல்ஃபோன் எண் 99422- 62345, வேளாண் உதவி இயக்குனர் 94438-10874 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். அல்லது அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் உதவி இயக்குனர் அலுவலகங்களில் விவசாயிகள் புகார் செய்யலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வேளாண் மாணவர்கள் மரக்கன்றுகள் நட்டனர்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,00:10 IST

சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழக ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத் தின் மூலம் வேளாண் புல மாணவர்கள் மரக்கன்றுகள் நட்டனர். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஊரக வேளாண் பணி அனுபவத் திட்ட த்தின் மூலம் வேளாண் புல மாணவர் கள் சிதம்பரம் அருகே நாஞ் சலூரில் விவசாயிகளிடம் நேரிடையாக வேளாண் அனுபவங்களை சேரித்து வருகின்றனர்.அதன் தொடர்ச்சியாக அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கினர்.பின்னர் முக்கிய இடங்களில் குமராட்சி துணை வேளாண் அலுவலர் சீனிவாசன்

மரக்கன்றுகள் நட்டு நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார்.வேளாண் மாணவர்கள் மற்றும் வேளாண் துணை பேராசிரியை மீனாம்பிகை உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**முந்திரி சாகுபடியை அதிகரிப்பதற்கு தோட்டக்கலைத் துறை மானிய உதவி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,00:42 IST

விழுப்புரம்: தரிசு நிலத்தின் தங்கம் என்றழைக்கப்படும் முந்திரி சாகுபடியை விழுப்புரம் மாவட்டத்தில் அதிகரிக்க தோட்டக்கலைத் துறை தீவிர முயற்சி மேற்கொண்டுள் ளது. இதற்காக அரசு சார்பில் 50 சதம் மானிய விலையில் விவசாயிகளுக்கு முந்திரி கன்றுகள் வழங்கப்படுகின்றன.இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் முந்திரி கொட்டைகள் உள் நாட்டு தேவையில் 50 சதவீதம் மட் டுமே பூர்த்தி செய்யப்படுகின்றன. பால், முட்டை மற்றும் இறைச்சி போன்று முந்திரியும் அதிக ஊட்டச் சத்துகள் நிறைந்ததால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடும் நிலை உள்ளது. முந்திரியில் புரதம், மாவுச் சத்து, அமினோ அமிலங்கள், வைட்டமின்கள் மற்றும் தாது உப்புகள் அடங்கியுள்ளதால் பலவித உணவு பொருட்களிலும் முந்திரி கலந்து தயார் செய்யப்படுகின்றன. இதனால் நமது தேவைக்காக வெளிநாடுகளிலிருந்து முந்திரி கொட்டைகள் இறக்குமதி செய்வதால் அரசு கூடுதலாக செலவிடும் நிலை உள்ளது. மேலும் விலையும் பன்மடங்கு உயர்த்தும் நிலை உள்ளது.இதனால் இந்திய அளவில் முந் திரி சாகுபடியை அதிகரிக்க மத் திய அரசு வேளாண் துறை மூலம் பல் வேறு முயற்சிகளை மேற் கொண்டு வருகிறது.விழுப்புரம் மாவட்டத்தில் கோலியனூர் ஒன்றியம் உள்ளிட்ட பகுதிகளில் முந்திரி சாகுபடியை அதிகரிக்க தேசிய தோட்டக்கலை திட்டத்தின் கீழ் இரண்டரை ஏக்கர் பரப்பளவில் முந்திரி சாகுபடி செய் யும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில் 200 கன்றுகள் விநியோகிக்கப்படுகிறது.

பயிர் பராமரிப்பிற்கு தேவையான உரங்கள் 12 ஆயிரம் ரூபாய் மதிப்பிலும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது.மேலும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு 2ம் ஆண்டிற்கு 75 சதவீதம், மூன்றாமாண்டிற்கு 90 சதவீதம் மானியத்தில் பழுது பார்த்து நடவு செய்ய முந்திரி கன்றுகள் வழங்கப்படுகின்றன. முந்திரி பயிர் செய்யப்பட்டுள்ள நிலத்தில் கன்றுகளுக்கு இடையே குறைந்த வயதுடைய பப்பாளி, பைன் ஆப் பிள், மாதுளை, சர்க்கரை வள்ளி, உளுந்து, பச்சைபயறு, எள், காரமணி, மணிலா, தக்காளி,முள்ளங்கி, தர்ப்பூசணி போன்றவை மூன்றாண் டுகள் வரை ஊடுபயிர் செய்து கூடுதல் லாபம் பெறலாம்.இரண்டரை ஏக்கர் பரப்பளவில் பயிர் செய்யப்படும் முந்திரி மரத்திலிருந்து நான்காமாண்டு முதல்10ம் ஆண்டுகள் வரை ஆண்டிற்கு 400 கிலோ முதல்

800 கிலோ வரையும், 11ம் ஆண்டு முதல் 30ம் ஆண்டு வரை 2 ஆயிரம் கிலோ வரையும் முந்திரி பருப்புகள் மகசூல் கிடைக்கும். இதன் மூலம் ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு 50 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. முந்திரி சாகுபடியில் ஆட்கள் தேவையும், தண்ணீர் தேவையும் மிகவும் குறைவு. மேலும் 31வது ஆண்டில் முந்திரி மரங்களை அறுவடை செய்வதன் மூலம் ஆயிரம் டன்னிற்கு மேல் விறகு கிடைக் கின்றன. இதன் மூலம் 3 லட்சம் ரூபாய்க்கு மேல் விவசாயிகள் லாபம் பெறும் வாய்ப்பு உள்ளது.மேலும் முந்திரி செடிகளை கால்நடைகள் மற்றும் பூச்சிகள் மூலம் ஏற்படும் சேத அளவும் குறைவு. தற்போது விழுப்புரம் மாவட்டத்தில் முந்திரி சாகுபடியை அதிகரிக்க தேசிய தோட்டக்கலை துறை மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**வடமாநிலங்களுக்கு ஏற்றுமதியாகும் தேங்காய் விலை அதிகரிப்பால் உள்ளூர் மக்கள் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,02:08 IST

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில் உற்பத்தி குறைந்த நிலையில், வடமாநில ஏற்றுமதிக்கு, "ஆர்டர்' குவிந்து வருவதால் தேங்காய் விலை உயர்ந்து வருகிறது. சில்லரை விலையில் ஒரு தேங்காய் எட்டு ரூபாய்க்கு விற்கப்படுவதால் உள்ளூர் நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாநில அளவில் தேங்காய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் சேலம் மாவட்டம் வாழப்பாடி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. ஆண்டு முழுவதும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு வாழப்பாடி பகுதியில் இருந்து தேங்காய் ஏற்றுமதியாகிறது.

தென்னை மரங்களை குத்தகைக்கு பிடித்து அறுவடை செய்தும், தேங்காய்களை எண்ணிக்கை அடிப்படையிலும் விவசாயிகளிடம் இருந்து தேங்காய் மண்டி அதிபர்கள் தேங்காயை கொள்முதல் செய்கின்றனர். கூலித் தொழிலாளர்களை கொண்டு மட்டை உரித்து, தரம் பிரிக்கும் வியாபாரிகள், முதல் தர தேங்காய்களை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மட்டுமின்றி, ராஜஸ்தான், குஜராத், மத்தியபிரதேஷம், உத்திரபிரதேஷம், பீஹார், மஹாராஷ்டிரா போன்ற வடமாநிலங்களுக்கும், கர்நாடகா , புதுச்சேரி உள்ளிட்ட அண்டை மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர்.வாழப்பாடி பகுதியில் இருந்து தேங்காய் ஏற்றுமதியாவதால், மரமேறும் தொழிலாளர்கள், தேங்காய் மட்டை உரிக்கும் தொழிலாளர்கள், லோடு மேன்கள், தென்னை நார் பிரித்தெடுக்கும் தொழிலாளர்கள், சில்லரை வியாபாரிகள், கயிறு திரிக்கும் கைவினைஞர்கள் என நேரடியாகவும், மறைமுகமாகவும் 10 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பு பெறுகின்றனர்.

நல்ல மழை பெய்தால், ஒரு ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள ஏறக்குறைய 70 தென்னை மரங்களில் இருந்து, ஓர் ஆண்டில் சராசரியாக ஒரு மரத்துக்கு 140 முதல் 160 தேங்காய் வரை அறுவடை செய்ய முடியும். ஆனால், இந்தாண்டு போதிய மழையில்லாததால் விளைச்சல் குறைந்து ஒரு மரத்திற்கு சராசரியாக 100 முதல் 120 தேங்காயே அறுவடையாகவில்லை.அதற்கிடையே விநாயகர் சதூர்த்தி விழா முடிந்த நிலையிலும், வடமாநிலங்களில் இருந்து தேங்காய் ஏற்றுமதிக்கு ஆர்டர் குவிந்து வருகிறது. அதனால் இரு மாதங்களுக்கு முன் வரை 1,000 தேங்காய்களுக்கு அதிகபட்சமாக 3,000 முதல் 3,500 ரூபாய் வரை விலை கொடுத்து கொள்முதல் செய்த வியாபாரிகள், தற்போது 5,000 ரூபாய் வரை விலை கொடுத்து தேங்காய் கொள்முதல் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.
விளைச்சல் குறைந்த நிலையில் தேங்காய்க்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளதால், தேய்காய் மண்டி அதிபர்களிடம் கொள்முதல் செய்து சில்லறை விற்பனை செய்யும் சிறு வியாபாரிகள் ஒரு தேங்காயை எட்டு ரூபாய்க்கு மேல் விற்பனை செய்கின்றனர். அதனால் தேங்காய் விளையும் பகுதியை சேர்ந்த உள்ளூர் மக்கள் கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டியநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.விளைச்சல் குறைவால் கவலையடைந்த தென்னை விவசாயிகளுக்கு, தேங்காய் விலை உயர்வு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் போதிய மழை பெய்தால், எதிர் வரும் ஜனவரி மற்றும் ஃபிப்ரவரியில் (தமிழ் மாதமான தை மற்றும் மாசியில்) வெட்டு சீஸனில் விளைச்சல் அதிகரித்து, தேய்காய் விலை குறையலாம் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சிறு விவசாயி கூட ஏற்றுமதியில் ஈடுபடலாம்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,02:00 IST

சேலம்: ""ஏற்றுமதி என்றாலே அதற்கு ஏராளமான திறன்கள் வேண்டும், பெரிய நிறுவனங்களால் மட்டுமே அது முடியும் என்பது போன்ற எண்ணம் பரவலாக காணப்படுகிறது. உண்மையில் சிறிய விவசாயி கூட ஏற்றுமதியில் ஈடுபட முடியும். இந்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்,'' என, மதுரை குளோபல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபாரின் டிரேடு இயக்குனர் ராஜமூர்த்தி பேசினார்.சேலம் பெரியார் பல்கலை மேலாண்மைக்கல்வி நிறுவனத்தில் ஏற்றுமதி ஊக்குவிப்பு மையம் துவக்கவிழா நேற்று நடந்தது. மேலாண்மைத்துறை தலைவர் ராஜேந்திரன் வரவேற்றார்.

பெரியார் பல்கலை துணைவேந்தர் முத்துச்செழியன் மையத்தை துவக்கி வைத்து பேசியதாவது: உலக அளவிலான பொருளாதாரத்தில் இந்தியா 133 வது இடத்திலும், வியாபாரம் துவக்குவதில்

169வது இடத்திலும், கட்டுமான பணிகளில் 175வது இடத்திலும் என பல துறைகளிலும் ரேங்க் பட்டியலில் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்கு ஏற்றுமதி துறையில் போதிய வளர்ச்சியடையாமல் இருப்பதும் காரணம்.தற்போதைய சூழ்நிலையில் அனைத்து துறைகளுக்கும், தொழில்களுக்கும் இன்டர்நெட் மற்றும் ஐ.டி., துறை அடிப்படையாக மாறிவருகிறது. குறிப்பாக ஏற்றுமதி, இறக்குமதி தொழில்களில் இன்டர்நெட் மிக அவசியமாகிறது. மார்க்கெட் மதிப்பு தெரிந்து கொள்ள, தகவல்களை பரிமாறிக்கொள்ள, வேகமான சேவை என பல்வேறு விதங்களில் உதவி வருகிறது.நம் நாட்டின் தொழில் ஏற்றுமதியில் மிக முக்கிய பங்கு வகிக்கும் சிறு, குறு தொழிற்சாலைகளிலும் நவீன தகவல் தொடர்பு முறை குறித்த தொழில்நுட்பங்களை பயன்படுத்த தொடங்கியுள்ளனர். இவை இன்னும் அதிகரிக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

மதுரை, "குளோபல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபாரின் டிரேடு' இயக்குனர் ராஜமூர்த்தி பேசியதாவது:மாணவர்களிடையே தொழில் முனைவோராக ஆவதற்கான குறிக்கோள்கள் கொண்டவர்கள் மிகவும் அரிது. இன்று இந்தியாவில் உள்ள 70 சதவிகித, "பிஸினெஸ்மேன்'கள் ஒரு விபத்தாகவே தொழில் முனைவோராக மாறியுள்ளனர்.
எந்த ஒரு தொழிலை தொடங்க வேண்டும் என்றாலும், அதில் பயம் வருகிறது. முதல் போட்டு, தொழில் தொடங்கி லாபம் சம்பாதிப்பதை விட பன்னாட்டு நிறுவனத்தில் நல்ல சம்பளத்தில் வேலைக்கு சேருவது பாதுகாப்பானது என்ற எண்ணம் இன்று இளைய தலைமுறையினரிடையே அதிகம் காணப்படுகிறது.உண்மையில் நம்நாட்டு வளர்ச்சிக்கு ஏராளமான தொழில் முனைவோர்கள் தேவைப்படுகின்றனர். 110 கோடி மக்கள் தொகை எண்ணிக்கை உள்ள நமது நாட்டில் 2.35 லட்சம் பேர் மட்டுமே ஏற்றுமதிக்கான ஐ.இ.சி., கோடு நெம்பர் பெற்றுள்ளனர். இதிலும் ஒரு லட்சம் பேர் மட்டுமே அதை தொடர்ந்து பயன்படுத்துகின்றனர்.ஏற்றுமதி என்றாலே அதற்கு ஏராளமான திறன்கள் வேண்டும், பெரிய நிறுவனங்களால் மட்டுமே அது முடியும் என்பது போன்ற எண்ணம் பரவலாக காணப்படுகிறது. உண்மையில் சிறிய விவசாயி கூட ஏற்றுமதியில் ஈடுபட முடியும். இந்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும், என்றார்.

**தட்டைக்காய் சாகுபடி டி.என்.பாளையத்தில் அமோகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,01:59 IST

டி.என்.பாளையம்: கொங்கர்பாளையம் வட்டாரத்தில் தட்டைக்காய் அறுவடை மும்முரமாக நடக்கிறது. சமையலில் தட்டைக்காய்க்கு தனியிடம் உண்டு. சாம்பாருக்கும், பொறியலுக்கும் தட்டைக்காய் பயன்படுத்தப்படுகிறது. டி.என்.பாளையம் யூனியனில் கொங்கர்பாளையம்,

வாணிப்புத்தூர், துறையம்பாளையம், இந்திரா நகர் பகுதியில் தட்டைக்காய் அதிகம் பயிராகிறது.தட்டைக்காய் நான்கு மாதப்பயிர். அதிகம் மழையுமின்றி, வெயிலுமின்றி இருக்கும் சீஸன் இப்பயிருக்கு ஏற்றது. ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் அமோக விளைச்சல் பெற முடியும்.

விதைத்த நான்காம் மாதம் காய் காய்க்கும். மூன்று நாட்களுக்கு ஒரு முறை காய் பறிக்கலாம். இவ்வாறு ஒன்றரை மாதம் வரை விளைச்சல் கொடுக்கும். ஆள் கூலி தவிர்த்து ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் சாகுபடி செலவாகிறது. காய் பறிப்பு கூலியாக ஒருவருக்கு ஒரு நாளைக்கு 150 ரூபாய் செலவாகிறது.ஏக்கருக்கு வாரத்துக்கு 600 கிலோ உற்பத்தி கிடைக்கும். நான்கு மாதத்தில் 10 டன் கிடைக்கும். கிலோ ஆறு ரூபாய்க்கு விலை போகிறது. செலவு போக 20 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்.மழை சீஸனாக இருந்த போதும் கொங்கர்பாளையம் வட்டாரத்தில் தட்டைக்காய் அறுவடை மும்முரமாக நடந்து வருகிறது. பீன்ஸ் காயை விட நீளமாக இருக்கும் இவை, அதிகளவு கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. கேரள வியாபாரிகள் நேரடியாக இங்கு வந்து காய் கொள்முதல் செய்கின்றனர்.

**மழையால் தக்காளி விலை கடும் வீழ்ச்சி**

பதிவு செய்த நாள்: அக்டோபர் 05,2010,23:05 IST

கிணத்துக்கடவு: கிணத்துக்கடவு பகுதியில் பெய்த மழையில் பாதிக்கப்பட்ட தக்காளி விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது.கிணத்துக்கடவு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட தக்காளி காய்ப்புக்கு வந்துள்ளது. இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக கன மழை பெய்தது. இதில், தக்காளி செடிகளின் அருகில் குச்சி நட்டு, தக்காளி செடியை கம்பியால் இழுத்து கட்டப்படாத தக்காளி செடிகளில் உள்ள தக்காளிகள் மழையால் கீழே சரிந்துள்ளது.இதனால், தக்காளி நிறம் மற்றும் சுவை மாறிவிட்டது. இத்தக்காளியை பறித்து கிணத்துக்கடவு வாரச்சந்தைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு ஏலம் விடப்பட்டது.
வழக்கம்போல், கேரளா வியாபாரிகள் அதிகளவில் வந்திருந்ததால், கடும் போட்டி ஏற்பட்டது. ஆனால், மழையால் பாதிக்கப்பட்ட செடிகளில் இருந்து பறிக்கப்பட்ட தக்காளி கிலோ ஒன்றுக்கு மூன்று ரூபாய்க்கு சென்றது.
குச்சி நடப் பட்டுள்ள தக்காளி :
செடிகளில் இருந்து பறிக்கப்பட்ட தக்காளி கிலோ ஒன்றுக்கு 10 ரூபாய்க்கு ஏலம் சென்றது.வியாபாரிகள் கூறுகையில், "மழையால் பாதிக்கப்பட்ட தக்காளிகள் ஒரு நாளைக்கு மேல் தாங்காது, உடனடியாக அழுகிவிடும். அதனால், மழையால் பாதிக்கப்பட்ட தக்காளிகளை

குறைந்த விலைக்கு எடுத்துள்ளோம். நன்றாக உள்ள தக்காளியை வழக்கம்போல் செல்லும் விலைக்கே எடுத்துள்ளோம். இங்கு எடுக்கப்படும் தக்காளிகள் கேரளாவுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது. அப்போது, மழையால் பாதிக்கப்பட்ட தக்காளியையும் சேர்த்து விற்பனை செய்துவிடுவோம்' என்றனர்.

**மாந்தோப்பில் பூச்சி மேலாண்மை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,22:51 IST

பெ.நா.பாளையம்: மாந்தோப்பில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் ஒட்டு கட்டும் முறைகள் குறித்து பெரியநாயக்கன்பாளையம் தோட்டக்கலைத்துறை அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.ஆண்டுதோறும் கோடை உழவு செய்வதன் மூலம் ஈ மற்றும் வண்டுகளின் முட்டை, புழு, கூட்டுப்புழு பருவங்களை அழிக்கலாம். மரத்தின் அடிப்பாகத்தில் ஈர களிமண் பூசுவதால் இளம்பூச்சிகள் மரத்தின் மேல்பகுதிக்கு செல்வதை தடை செய்யலாம். மாம்பழ கூண்வண்டு தாக்கிய பழங்களை கையால் பொறுக்கி அழிக்கலாம். மாம்பழ அறுவடைக்கு பின், காய்ந்த கிளைகளை அகற்றி எரித்து விடலாம். தேவையற்ற கிளைகளை கவாத்து செய்வதால், மருந்து தெளிக்க ஏதுவாகிறது. மாவுப் பூச்சி மற்றும் இலைத் தண்டு துளைப்பான் போன்ற மாமரத்தை தாக்கும் பூச்சிகளை ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மூலம் கட்டுப்படுத்தலாம். ஆனைகட்டியில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில் மா ஒட்டுகட்டும் பணி நடக்கிறது. இங்கு விவசாயிகள் மா ஒட்டுகட்டும் செயல் விளக்கம் மற்றும் பூச்சி மேலாண்மை செயல் விளக்கங்களை பார்வையிடலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**படல் அமைத்து சின்ன வெங்காயம் பாதுகாப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,23:32 IST

பல்லடம்: தீபாவளியையொட்டி, சின்ன வெங்காயம் கொள்முதல் விலை அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில், பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டை வட்டார விவசாயிகள், நாட்டுரக சின்ன வெங்காயத்தை படல் அமைத்து பட்டறை போட்டு பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரத்தில் ஒவ்வொரு பருவத்திலும் 6,000 ஏக்கர் பரப்பளவில் ஹைபிரட் ரக சின்ன வெங்காயமும், 2,000 ஏக்கர் பரப்பளவுக்கு நாட்டு ரக சின்ன வெங்காயமும் சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி செய்யப்படும் சின்ன வெங்காயம் அறுவடைக்குபின், திருப்பூர், கோவை, தூத்துக்குடி, திண்டுக்கல், சென்னை,வேலூர், திருச்சி,

மதுரை பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.தற்போது, ஒரு கிலோ சின்ன வெங்காயம் கொள்முதல் விலை ரூ.16 ஆக உள்ளது. இக்கொள்முதல் விலை விவசாயிகளுக்கு ஓரளவு கட்டுப்படியானதாக உள்ளது.இருப்பினும், வரும் தீபாவளியை முன்னிட்டு, சின்னவெங்காயம் தேவை அதிகரிக்கும் என்பதால் கொள்முதல் விலை கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை உயரும் என்ற நம்பிக்கையில் பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரத்தில் உள்ள சின்னவெங்காயம் விவசாயிகளில் 40 சதவீதம் பேர், தங்களின் நாட்டுரக சின்ன வெங்காயத்தை படல் அமைத்து பாதுகாக்கும் பணியில் ஈடுபடத்துவங்கியுள்ளனர். ஹைபிரட் வெங்காயத்தை 15 நாட்களுக்கு மேல் இருப்பு வைக்க முடியாது. நாட்டு ரக சின்னவெங்காயத்தை படல் அமைத்து பட்டறை போட்டால், மூன்று மாதம் வரை இருப்பு வைக்க முடியும்.

**விவசாயிகள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,23:28 IST

பொங்கலூர்: துல்லிய பண்ணையம் திட்டத்தில் பதிவு செய்த விவசாயிகள் கூட்டம், வேடம்பட்டியில் நடந்தது.பொங்கலூர், தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமாறன் தலைமை வகித்தார். சொட்டு நீர் பாசனம் செய்வதன் மூலம் குறைந்த தண்ணீரை கொண்டு கூடுதல் மகசூல் பெறுவது குறித்தும், தோட்டக்கலை பயிர்களுக்கு வழங்கப்படும் மானியம் பற்றியும் உதவி இயக்குனர் விவசாயிகளுக்கு விளக்கினார்.வேளாண் துறை அலுவலர் அர்ச்சுணன், வடக்கு அவினாசிபாளையம் முன்னாள் ஊராட்சி தலைவர் மகாலிங்கம், துல்லிய பண்ணையம் திட்ட துணை தலைவர் குமாரசாமி, செயலாளர் சுப்ரமணியன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

**6 ஆயிரம் மூட்டை நிலக்கடலை வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,23:28 IST

அவிநாசி: சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு 6,000 மூட்டை வரத்தாக இருந்தது.சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, கடந்த வாரத்தை போலவே வரத்து அதிகரித்திருந்தது. வரத்து அதிகமான நிலையில், விலையும் உயர்ந்தது. காய்ந்த நிலக்கடலை முதல் ரகம் குவிண்டாலுக்கு ரூ.3,600 முதல் ரூ.3,700 வரை, இரண்டாம் ரகம் ரூ.3,350 முதல் ரூ.3,500 வரை, பச்சை ரகம் ரூ.1,450 முதல் ரூ.1,700 வரை ஏலத்தில் எடுக்கப்பட்டது. கடந்த வாரத்தை காட்டிலும் முதல் ரகம் ரூ.70, இரண்டாம் ரகம் மற்றும்

பச்சை ஆகியன குவிண்டாலுக்கு ரூ.100 அதிகமாக ஏலத்துக்கு போனது.சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) ரமேஷ்குமார் கூறியதாவது:இந்த வாரமும் வரத்து நன்றாக இருந்தது. விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதால், அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் வருகின்றனர். அவிநாசி, புளியம்பட்டி, நம்பியூர் வட்டாரத்தை சேர்ந்த 600 விவசாயிகள், பல பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பயனடைந்தனர். 6,000 மூட்டை வரத்தாக இருந்தது; அடுத்தடுத்த வாரங்களிலும் இதே வரத்து நீடிக்கும், என்றார்.

**மக்காச்சோளத்துக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,23:27 IST

திருப்பூர்: "மக்காச்சோளம் பயிர் செய்வோரை ஊக்குவிக்கும் வகையில், மானியம் வழங்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கோழி பண்ணைகளின் வளர்ச்சியால், மக்காசோளம் தேவை அதிகரித்து வருகிறது. பல்லடம், உடுமலை பகுதியிலும், திருப்பூர், பொங்கலூர் சுற்றுப்பகுதியிலும் வசிக்கும் விவசாயிகள் மக்காச்சோளம் பயிரிடுகின்றனர். ஆவணி பட்டத்தில் பயிடும் பயிர்களில் மக்காச்சோளம் ஒன்று. தற்போது கிடைத்துள்ள மழையை பயன்படுத்தி மக்காசோளம் பயிர் செய்யும் பணி முழுவீச்சில் நடக்கிறது.திருப்பூர் மாவட்டத்தில் 22 ஆயிரம் ஹெக்டேருக்கு அதிகமாக மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. எண்ணெய் வித்து, சிறு தானியங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் மக்காச்சோளத்துக்கு இல்லை. மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு, வேளாண் துறை உதவி செய்ய வேண்டும் என, விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது:கடந்த 10 ஆண்டுகளில் அதிகமான விவசாயிகள் மக்காச்சோளத்துக்கு மாறி வருகின்றனர். உளுந்து, பச்சைபயறு உள்ளிட்ட பயிறு வகை பயிர், எண்ணெய் வித்து, தானியப்பயிர்களுக்கு கிடைக்கும் மானியம் போல், மக்காச்சோள பயிர்களுக்கு வழங்கப்படுவதில்லை.
கோழிப்பண்ணை தொழில், ஆயில் தயாரிப்பு, பாப்கார்ன், கேக் போன்ற உணவு பொருள் தயாரிக்க மக்காச்சோளம் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.வேளாண் துறையில் கோ 1, கோ.எம்.எச்., 5 ரகங்கள் வழங்கப்படுகின்றன. அதிக மகசூல் எடுக்க, தனியார் நிறுவன விதைகளை பயன்படுத்துகின்றனர். வேளாண் துறை சார்பில் வழங்கப்படும் "மினி கிட்' சோள விதைகள் மட்டும் வழங்கப்படுகின்றன. அதிக மகசூல் கிடைக்கும் உயர்ரக விதைகளை வேளாண் துறை மூலம் வழங்க வேண்டும்.ஆட்கள் பற்றாக்குறை, தண்ணீர் தட்டுப்பாடு, உரம் விலை அதிகரிப்பு, கூலி உயர்வு என பல்வேறு பிரச்னைகளை சந்திக்க நேரிடுகிறது. மக்காச்சோள பயிர்களுக்கு என்று மானிய திட்டம் அறிவிக்க வேண்டும்.விதை கொள்முதல் செய்தல் மற்றும்

பயிருக்கு தேவையான உரங்கள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். மக்காச்சோளத்துக்கு மானியம் வழங்க, வேளாண் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

**நெல் சாகுபடியில் குலை நோய்: விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,23:19 IST

உடுமலை: நெல் சாகுபடியில் பரவி வரும் குலை நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண்துறையினர் விவசாயிகளுக்கு அட்வைஸ் வழங்கியுள்ளனர்.

உடுமலை வேளாண் உதவி இயக்குனர் சைலஸ் அறிக்கை:உடுமலை வட்டாரத்தில் 240 எக்டர் பரப்பில், நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது நிலவி வரும் பருவநிலை காரணமாக குலை நோய் தாக்குதல் சில இடங்களில் காணப்படுகிறது. குறைவான இரவு வெப்ப நிலை, அதிகப்படியான ஈரப்பதம், மேகமூட்டத்துடன் லேசான தூறல், அதிக தழைச்சத்து, முந்தைய பருவத்தின் பயிர் கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தாவிட்டால், குலை நோய் தாக்கும்.நெல் விதைகளை நாற்றங்கால் தயாரிப்பதற்கு முன்பு சூடோமோனஸ் ப்ளூரொசன்ஸ் என்ற உயர் பூஞ்சாண கொல்லியுடன் 10 கிராம் ஒரு கிலோ விதைக்கு என விதை நேர்த்தி செய்ய வேண்டும். கூடுதலாக தழைச்சத்து இடுதலை தவிர்த்து, குலை நோய் தாக்காத ரகங்களை தேர்வு செய்ய வேண்டும்.அதிகப்படியான தண்ணீர் வயலில் தேங்குவதை தவிர்த்து, வரப்பில் காணப்படும் களைச்செடிகளை அப்புறப்படுத்தினால், நோய் வராமல் தவிர்க்கலாம். பைரிகுளோரியா ஒரைசா என்ற பூசாண நோய் கிருமி இலைகளை தாக்கும்.தாக்கப்பட்ட இடத்தில் சாம்பல் நிறப்புள்ளிகள் பழுப்பு நிற எல்லை கோடுகளுடன் வைர வடிவத்தில் அல்லது உருளை வடிவத்தில் காணப்படும். புள்ளிகள் ஒன்று சேர்ந்து தீ பட்டது போல் அறிகுறிகளை ஏற்படுத்தும்.

கதிர்களில், மணிகளிலும் இது போன்ற தாக்குதலை ஏற்படுத்தும். இதனால், நெல் மணிகள் பதர்களாக மாறுகின்றன. பயிரின் தண்டுப்பகுதிகளிலும் பழுப்பு நிறப்புள்ளிகள் காணப்படும். தாக்குதல் தென்பட்டதும், கார்டென்டிசம் 250 கிராம் ஒரு எக்டருக்கு என்ற அளவில் தெளிக்க வேண்டும்.தாக்குதலின் தன்மை தீவிரமாக காணப்பட்டால், ட்ரைசைக்ளோசால் 75 என்ற மருந்தை ஒரு எக்டருக்கு 500 கிராம் தெளிக்கலாம். மருந்துகளை காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும். மழை பெய்யும் நேரத்தில் மருந்து தெளிக்க கூடாது என வேளாண்மை இணை இயக்குனர் முத்துசாமி அறிவுரை அடிப்படையில் வேளாண் உதவி இயக்குனர் சைலஸ் தெரிவித்துள்ளார்.

**பூக்களின் விலை உயர்வுவிவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,23:18 IST

உடுமலை: ஆயுத பூஜை சீசனையொட்டி பூக்களின் விலை உயர்ந்து வருவதால் உடுமலை பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பூ சாகுபடி குறைந்தளவே மேற்கொள்ளப்படுகிறது. போதிய ஊக்குவிப்பு இல்லாதது, விற்பனை சந்தை பிரச்னை காரணமாக விவசாயிகள் பூ சாகுபடி மேற்கொள்ள ஆர்வம் காட்டுவதில்லை. இதனால், பிற மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்படும் பூக்களே உடுமலை சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. சில பகுதிகளில் மட்டும் பண்டிகை சீசனுக்காக பூக்கள் பயிரிடப்படுகிறது. ஆயுதபூஜையையொட்டி குறிச்சிக்கோட்டை மற்றும் சுற்றுப்பகுதிகளில் கோழிக்கொண்டை பூ அதிகளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, கிலோவிற்கு 20 மு ல் 25 ரூபாய் வரை விலை கிடைத்து வந்தது. பண்டிகை சீசன் துவங்க உள்ளதால் பூவின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.இது குறித்து விவசாயி பஞ்சலிங்கம் கூறுகையில், கோழிக்கொண்டை சாகுபடியில் ஏக்கருக்கு ஆயிரம் கிலோ வரை விளைச்சல் கிடைக்கும். சீசனில் கிலோ 50 ரூபாய் வரை விலை கிடைக்கும். பருவநிலை ஒத்து போனதால் இந்தாண்டு நல்ல விளைச்சல் கிடைத்து வருகிறது', என்றார்.

**ஒரு கிலோ தக்காளி 7 ரூபாய்!**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 05,2010,23:14 IST

திருப்பூர்: திருப்பூர் தெற்கு உழவர் சந்தையில் ஒரு கிலோ தக்காளி ஏழு ரூபாய்க்கு விற்கப்படுகிறது.மார்க்கெட் நிலவரம்:தேங்காய் எண்ணெய் விலை உயர்வு: சமையல் ஆயில் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறியதாவது:

தேங்காய் எண்ணெய் விலை கிலோவுக்கு இரண்டு ரூபாய் அதிகரித்துள்ளது. வரும் நாட்களில் மழை அளவு அதிகமாக இருந்தால், தொடர்ந்து விலை அதிகரிக்கும். கடலை எண்ணெய் மற்றும் ரீபன்ட் ஆயில் கிலோவுக்கு ஐந்து ரூபாய் குறைந்துள்ளது. சமையல் ஆயில் விலை குறைவு ஏற்பட்டாலும், மீண்டும் விலை உயர்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. தேங்காய் எண்ணெய் கிலோ 82 ரூபாய்; ரீபன்ட் ஆயில் 105; கடலை எண்ணெய் 94; நல்லெண்ணெய் 85; விளக்கெண்ணெய் 95; பாமாயில் 50; நெய் 280 ரூபாய்க்கு விற்கிறது, என்றார்.மிளகாய் விலை வீழ்ச்சி: தெற்கு உழவர் சந்தை நிர்வாக அலுவலர் அறிவழகன் கூறியதாவது:பச்சை மிளகாய் விலை குறைந்து வருகிறது. கடந்த மாதம் கிலோ 25 ரூபாய் வரை விற்றது; வரத்தும் 3,000

கிலோவாக இருந்தது. இன்று (நேற்று) சந்தைக்கு 6,000 கிலோ வந்தது. ஒரு கிலோ 14 ரூபாயாக குறைந்து விட்டது. இதர காய்கறிகளின் வரத்து வழக்கம்போல் உள்ளது. மழை நீடித்தால் விலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது.
தக்காளி கிலோ 7 ரூபாய்; வெண்டை 20; கத்தரி 20; அவரை 20; பெரிய வெங்காயம் 18; சின்னவெங்காயம் 18; புடலை 16; பீர்க்கன் 25; சுரை 5; பாகல் 20; கொத்தவரை 12; பூசணி மற்றும் அரசாணி 5; பொரியல்தட்டை 12; முருங்கை 15; தேங்காய் 15; உருளை 15; கேரட் 25; பீட்ரூட் 10; கோஸ் 15; காலிபிளவர் 8; நூல்கோஸ் 15; முள்ளங்கி 10; பீன்ஸ் 25; கீரைவகைகள் 16.
கறிவேப்பிலை 18; கொத்தமல்லி 20; இஞ்சி 30; வாழைதண்டு 5; வாழை இலை 5; வாழைக்காய் 15; வாழைப்பூ 5; வாழைப்பழம் 20; மரவெள்ளி 15; நெல்லிக்காய் 30; எலுமிச்சை 40; சப்போட்டா 15; கொய்யா 15; பப்பாளி 8; நிலக்கடலை 15; மக்காச்சோளக் கதிர் 8; காளான் 8 ரூபாய்க்கு விற்கிறது. என்றார்.பருப்பு விற்பனை மந்தம்: திருப்பூர் மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், ""பருப்பு வகை மற்றும் அஸ்கா விலையில் மாற்றம் ஏற்படவில்லை. கடந்த வார விலையே நீடிக்கிறது. பனியன் நிறுவனங்களின் தொழில் பாதிப்பு மற்றும் மழை உள்ளிட்ட காரணங்களால், விற்பனை மந்தமாக உள்ளது. துவரம் பருப்பு கிலோ 58 ரூபாய்; பாசிபயிறு 60; உருட்டு உளுந்து 84; கருப்புஉளுந்து 68; பாசிபருப்பு 65; தட்டைப்பயிறு 36; கொள்ளு 26; சுண்டல் கடலை 36; வரமிளகாய் 50 முதல் 58 வரை; அஸ்கா 28; சம்பா ரவை 66; முந்திரி 380; ஏலக்காய் கிலோ 1,000 ரூபாய்க்கு விற்கிறது'' என்றார்.

**கோழிப்பண்ணைக்கு எதிரான பிரச்னை நடவடிக்கைக்கு 15 நாள் அவகாசம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,01:12 IST

க.பரமத்தி: கோடந்தூர் பஞ்சாயத்தில் கோழிப்பண்ணை அமைவதற்கு எதிராக மக்கள், பஞ்சாயத்து கவுன்சிலர்கள் களமிறங்கியதால், அவரக்குறிச்சி தாலுகா அலுவலகத்தில் அமைதி பேச்சுவார்த்தை நடந்தது. பண்ணை நிர்வாக தரப்பில் நடவடிக்கை எடுக்க 15 நாள் அவகாசம் அளிக்கப்பட்டது.க.பரமத்தி யூனியன், கோடந்தூர் பஞ்சாயத்தில் உள்ள உடையாம்பாளையத்தில் ஈரோடு சுப்ரீம் பவுல்டரி நிறுவனம் கோழிப்பண்ணை நிறுவனம் சுமார் 75 ஏக்கர் பரப்பளவில் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. கோழிப்பண்ணை அமைத்தால் அப்பகுதியில் நிலத்தடி நீர் குறைபாடு, நிலம் மாசுபாடு, கால்நடை பாதிப்பு, ஈ தொல்லை மற்றும் பறவை காய்ச்சல் உள்ளிட்ட நோய்கள் ஏற்படுவதை தடுக்க முடியாது என மக்கள் குற்றஞ்சாட்டினர். பஞ்சாயத்து கவுன்சிலர்கள் ஒட்டுமொத்தமாக ராஜினாமா செய்வதாக அறிவித்தனர்.

மேலும், மக்கள் கோரிக்கைக்கு ஆதரவாக அ.தி.மு.க., -தி.மு.க., மற்றும் அனைத்து கட்சியும் ஆதரவு தெரிவித்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் அரவக்குறிச்சி தாசில்தார் உத்தமன் தலைமையில், கோழிப்பண்ணை உரிமையாளர் பெரியசாமி, உதவி பொதுமேலாளர் வெங்கடேசன், அரவக்குறிச்சி டி.எஸ். பி., ஞானசிவக்குமார், க.பரமத்தி தி.மு. க., ஒன்றிய செயலாளர் கருணாநிதி ஆகியோர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடந்தது. பொதுமக்கள் கோழிப்பண்ணை அமைக்க எதிர்ப்பு தெரிவித்ததால், அடுத்தக்கட்ட நடவடிக்கை 15 நாள் ஒத்திவைக்கப்பட்டது. "அதற்குள் நிர்வாகம் சரியான பதில் தரவேண்டும்' என்று தாசில்தார் உத்தரவிட்டார்.

**வாழை சாகுபடிக்கு பாசனம் நிறுத்தம்: ஆர்.டி.ஓ.,விடம் புகார்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,01:11 IST

குளித்தலை: நெய்தலூர் காலனியில் வாழை சாகுபடிக்கு பாதகமாக தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு,குளித்தலை ஆர்.டி.ஓ., பாலசுப்பிரமணியத்திடம் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர்.நெய்தலூர் காலனியை சேர்ந்த ராமையா, சுப்பம்மாள், ஜனகவள்ளி, நீலாவதி, காமாட்சி, ரங்கரத்தினம் ஆகியோர் அளித்த மனுவில் உள்ளதாவது: நெய்தலூர் காலனியில், ராணுவத்துக்கு வழங்கப்பட்ட ஏரி நிலத்தில் தற்போது வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

ஆறு ஏக்கர் நிலத்துக்கும், சேட்டு மருதமுத்து என்பவரின் நிலம் வழியாக தண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. சுமார் 40 ஆண்டுகளாக இவ்வாறு தண்ணீர் வந்து கொண்டிருந்த வடிகால், கடந்த 15 நாட்களாக சேட்டு மருதமுத்து தண்ணீர் வடியவிடாமல் நிறுத்திவிட்டார். இதனால், தண்ணீர் பாசன வசதியின்றி ஆறு ஏக்கர் நிலம் மற்றும் சுற்றியுள்ள சுமார் 15 ஏக்கர் வாழை சாகுபடி பாதிக்கப்படம்அபாயம் உள்ளது. வாழை சாகுபடி நிலத்தை பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கோரியுள்ளனர்.

**இயற்கை விவசாயத்தால் நிலம் கெடாது நபார்டு உதவி பொது மேலாளர் விளக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,01:01 IST

திருத்துறைப்பூண்டி: பருவநிலை மாற்றத்தால் மிதமான மழை தொடர்ந்து பெய்து வருவதால் நெல் பயிரை தாக்கும் பூச்சிகளால் பெரும் அளவில் பயிர் பாதிக்காமல் இருக்க இயற்கை விவசாய

முறையில் இடுபொருள் தயாரிப்புக்களான முட்டை அமிலம், மீன் அமிலம், மூலிகை பூச்சிவிரட்டி செய்முறை பயிலரங்கம் திருத்துறைப்பூண்டி அடுத்த ஆதிரெங்கம் இயற்கை விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடந்தது.ஆதிரெங்கம் பஞ்சாயத்து தலைவர் முருகதாஸ் தலைமை வகித்தார். ஜேசீஸ் சங்க தலைவர் ராஜ்மோகன் முன்னிலை வகித்தார். கிரியேட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன் வரவேற்றார்.பயிலரங்கை நாகை மாவட்ட வேளாண் விற்பனைக் குழு தலைவர் அம்பலவாணன் தலைமை வகித்து துவக்கி வைத்தார்.

திருவாரூர் பஞ்சாப் நேஷனல் வங்கி மேலாளர் ரவீந்திரன் பேசியதாவது: விவசாயிகள் சிந்தனையை மாற்றி செயல்பட்டால் வெற்றி நிச்சயம். இயற்கை விவசாயத்துக்கு அழிவு என்றுமில்லை. தொடர்ந்து ரசாயன உரத்தை பயன்படுத்திய விவசாயிகள் மீண்டும் இயற்கை விவசாயம் என்பதில் சற்று தாமதமாக ஏற்றுக் கொண்டு வருகிறார்கள். விரைவில் இது முழு வெற்றி பெறும்.இவ்வாறு அவர் பேசினார்.நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ராகவன் பேசியதாவது:இயற்கை தரும் உரங்களான கால்நடை சாணம், கழிவுகளை பயன்படுத்துவதால் நிலம் வளம் பெறுகிறது. எப்படி தாய்பாலை தொடர்ந்து குடிக்கும் குழந்தை நோய் தாக்குதலில் இருந்து தன்னை காப்பாற்றிக் கொள்கிறதோ, அதுபோல இயற்கை விவசாயத்தால் தாய் என்ற நிலம் வளம் பெறுகிறது.நபார்டு வங்கியை பொறுத்தவரை கடந்த 26 ஆண்டாக உழவர் மன்றங்களை துவங்கி விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி வழங்கி வருகிறோம். தற்போது, திருவாரூர் மாவட்டத்தில் ஒவ்வொரு உழவர் மன்றத்துக்கும் இரண்டு பேரை தேர்வு செய்து இயற்கை விவசாயம் தொடர்பான தொழில் நுட்ப பயிற்சி வழங்கப்படும். சிறந்த பயிற்சியாளர்களை உருவாக்கி, அவர்கள் மூலம் இயற்கை விவசாயத்துக்கு விவசாயிகளை முழு மூச்சில் ஈடுபட கிரியேட் தொண்டு நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றுவோம்.இவ்வாறு அவர் பேசினார்.

ஆத்மா வேளாண் துறை ஆலோசனைக்குழு உறுப்பினர் ஜானகிராமன், நம்பிக்கை தொண்டு நிறுவன இயக்குனர் சவுந்தர்ராஜன், வேவ்ஸ் பவுண்டேஷன் நிர்வாக அறங்காவலர் வரதராஜன், இயற்கை விவசாய முன்னோடி கரிகாலன் உட்பட பலர் பேசினர்.ஏற்பாடுகளை கிரியேட், ஜேசீஸ் சங்கம், ஜி.டி., பவுண்டேஷன், வேவ்ஸ் பவுண்டேஷன், பாலம் தொண்டு நிறுவனம், ஒற்றுமை அறக்கட்டளை ஆகியவை இணைந்து செய்திருந்தது. பாலம் தொண்டு நிறுவன இயக்குனர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

**மல்லிகை விலை உயரும்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,02:36 IST

மதுரை:""சரஸ்வதி பூஜை, நெருங்குவதால், மல்லிகை பூ விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது,'' என்கிறார், பூ மார்க்கெட் சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன். பூக்கள் விலை குறித்து அவர் கூறியதாவது: ஒரு கிலோ மல்லிகை 250 ரூபாய் வரையும், சம்பங்கி 50 ரூபாய், அரளி 40, ரோஜா 40, பிச்சிப்பூ 200, கனகாம்பரம் 400, முல்லைப்பூ 200, கோழிக்கொண்டை 30, மரிக்கொழுந்து 25, மெட்ராஸ் மல்லி 200 ரூபாய்க்கு விற்கப்பட்டது என்றார்.

**உளுந்தம் பருப்பு விலை தொடர்ந்து குறைவு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,02:35 IST

மதுரை: மதுரையில் தீபாவளி பண்டிகையையொட்டி, உளுந்தம் பருப்பு விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. பருப்பு வியாபாரிகள் சங்க செயலாளர் வெற்றிச்செல்வன் கூறியதாவது :கடந்த வாரம் 3750 ரூபாய் முதல் 5100 ரூபாய் வரை விற்ற நூறு கிலோ உளுந்தம் பயறு, நேற்று 3600 முதல் ரூபாய் 4500 ரூபாய் வரையிலும், 7600 ரூபாய் முதல் 8200 ரூபாய் வரை விற்ற பருப்பு, நேற்று 7400 ரூபாய் முதல் 7800 ரூபாய் வரை விற்கப்பட்டது.துவரம் பயறு 4000 ரூபாய் முதல் 4150 ரூபாய் வரையிலும், பருப்பு 5700 ரூபாய் முதல் 6000 ரூபாய் வரையும், பாசிப் பயறு 3500 ரூபாய் முதல் 4000 ரூபாய் வரையும், பருப்பு 5500 முதல் 6000 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது என்றார்.

**பச்சை மிளகாய் கிலோ ரூ.3**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,02:33 IST

மதுரை: தொடர் மழையால், பச்சை மிளகாய் செடிகள் அழுகி வருவதால், நெல்லை மாவட்டம் சுரண்டை, புளியங்குடி பகுதியில் இருந்து மதுரை மாட்டுத்தாவணி சென்ட்ரல் மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்துள்ளது. கிலோ 20 ரூபாய்க்கு விற்ற நிலையில் நேற்று 3 ரூபாய்க்கு விற்கப்பட்டது.மற்ற காய்கறி விலை குறித்து, சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது : நேற்று ஒரு கிலோ தக்காளி 10 ரூபாய், உருட்டு தக்காளி 8, கத்தரிக்காய் 10, வெள்ளை கத்தரிக்காய் 6, பூசணிக்காய் 5, சுரைக்காய் 5, புடலைங்காய் 7, வெண்டைக்காய் 10, கேரட் 14, பீட்ரூட் 10,

முள்ளங்கி 12, உருளை கிழங்கு 10-14, சேனை கிழங்கு 20, கருணை கிழங்கு 25, வெங்காயம் 18, சிறியது 15, பாகற்காய் 15, சிறியது 25, இஞ்சி 20, பீன்ஸ் 20, பட்டர் பீன்ஸ் 40, சோயா பீன்ஸ் 30, பட்டாணி 100, அவரைக்காய் 25, கொத்தவரை 7, காலிபிளவர் 4-7, முட்டைகோஸ் 8, கறிவேப்பிலை 12, புதினா 9, கொத்தமல்லி 14, கீரை வகைகள் 7, நூக்கல் 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது என்றார். சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**விவசாய உரம் தட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,00:55 IST

முதுகுளத்தூர்: தற்போது மழை சீசன் துவங்கி உள்ளதால் விவசாய பயிர்களும் செழிப்புடன் வளர்ந்து வருகிறது. பயிர்களின் வளர்ச்சிக்கேற்றவாறு உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் முதுகுளத்தூர், கடலாடி, கமுதி ஒன்றிய விவசாய கிட்டங்கியில் பற்றாக்குறையாக உள்ளதால், விவசாய பணிகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் வியாபாரிகள்,தனியார் கடைகளில் அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர். விவசாய பணிகள் மந்தமாகவும், பயிர்கள் வளர்ச்சியின்றியும் காணப்படுகிறது. விவசாயிகளுக்கு போதுமான உரங்கள், மருந்துகள் அரசு மாநிய விலையிலும் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாணவர்களுக்கு உரத்தயாரிப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,02:31 IST

நாகமலைபுதுக்கோட்டை: நாகமலை புதுக்கோட்டை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி நுண்ணுயிரியல் மற்றும் உயிர் தொழில் நுட்பவியல் துறைகள் சார்பில்  மாணவர்களுக்கான "மண்புழு உரம் தயாரித்தல்  மற்றும் சந்தையிடல்' குறித்து ஒரு நாள் பயிற்சி நடந்தது.  விழாவில் கல்லூரி முதல்வர் மாரீஸ்குமார் வரவேற்றார். சுயநிதிப்பிரிவு இயக்குனர் முன்னிலை வகித்தார். தாளாளர் மகேந்திரவேல் தலைமை வகித்தார்.  துறை தலைவர் மணிவண்ணன், பேராசிரியர் முத்துராயர் ஆகியோர் மாணவர்களுக்கு செயல் முறை விளக்கத்துடன் பயிற்சியளித்தனர்.

**விவசாயக் கண்காட்சி மதுரையில் அக்., 9ல் துவக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,02:39 IST

மதுரை: மதுரை தமிழ் லயன்ஸ் சங்கம், வேளாண்மை பல்கலை சார்பில் 4வது விவசாயக் கண்காட்சி மதுரை காந்திமியூசியம் மைதானத்தில் அக்., 9 ல் துவங்குகிறது. கண்காட்சி திட்ட அலுவலர் தேசாய், லயன்ஸ் வட்டார தலைவர் தங்கத்துரை, மாவட்ட செய்தி தொடர்பாளர் நெல்லை பாலு, மதுரை தமிழ் லயன்ஸ் சங்க செயலாளர் முருகன் கூறியதாவது: விவசாய கண்காட்சியை அக்., 9 ல் கலெக்டர் காமராஜ் திறந்து வைக்கிறார். கோவை வேளாண் பல்கலை துணை வேந்தர் முருகேச பூபதி, லயன்ஸ் ஆளுநர் சின்ன அருணாச்சலம் பேசுகின்றனர். 150 ஸ்டால்களில் விவசாயத் துறையில் முன்னணியில் உள்ள நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

காலை 11 மணி முதல் இரவு 8 மணி வரை விவசாயம் தொடர்பான கருத்தரங்கங்கள்நடைபெறுகிறது. சிறந்த விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்படும். விவசாயத்தில் பயன்படுத்தப்படும் நவீன இயந்திரங்களின் செயல்பாடுகளை, விவசாயிகள் நேரடியாக தெரிந்து கொள்ளலாம். விவசாய பல்கலை சார்பில் மண்பரிசோதனை இலவசமாக செய்து தரப்படும். விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் உள்ள மண்மாதிரிகளை சேகரித்து வந்தால், அதில் எந்தவகையான பயிர்களை சாகுபடி செய்யலாம், என ஆலோசனைகளும் வழங்கப்படும். கண்காட்சி அக்., 12 வரை, காலை 11 முதல் இரவு 9.30 மணி வரை நடைபெறும். அனுமதி இலவசம்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,00:02 IST

சேத்தூர்: கணபதி சுந்தரநாச்சியார்புரத்தில் நடந்த கால்நடை பாதுகாப்பு திட்ட முகாமிற்கு ஊராட்சி தலைவி சுந்தரம்மாள் தலைமை வகித்தார். அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் செந்தில்குமார் வரவேற்றார்.
ஸ்ரீவில்லிபுத்தூர் கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் செல்லச்சாமி, சேத்தூர் கால்நடை உதவி டாக்டர் ரவிசந்திரன், உதவியாளர் பன்னீர்செல்வம் சிகிக்சை அளித்தனர். கன்றுகளை சிறப்பாக வளர்த்தவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர் பழனிச்சாமி ஏற்பாடு செய்தார்.

தேசிய வேளாண் காப்பீடு திட்டம் விவசாயிகளுக்கு ரூ.6.54 லட்சம் இழப்பீடு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,02:21 IST

திருநெல்வேலி : நல்லை மாவட்டத்தில் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்துள்ள விவசாயிகளுக்கு இந்திய வேளாண் காப்பீட்டு கழகம் 6.54 லட்சம் இழப்பீடு வழங்கியுள்ளது.புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களால் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி மற்றும் நோயால் பயிருக்கு சேதம் ஏற்படும் போதும் இழப்பை ஈடுகட்டும் வகையில் மத்திய, மாநில அரசுகளால் பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.நெல், மக்காச் சோளம், நிலக்கடலை, பருத்தி, கரும்பு ஆகிய பயிர்களுக்கு வரையறுக்கப்பட்ட பிர்காக்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. காப்பீடு செய்யம் பயிர்களை சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேரலாம்.

பயிர் கடன் பெறுபவர்கள் கட்டாயத்தின் அடிப்படையிலும், பயிர் கடன் பெறாதவர்கள் விருப்பத்தின் அடிப்படையிலும் இத்திட்டத்தில் சேரலாம். குத்தகைக்கு பயிரிடும் விவசாயிகளும் இத்திட்டத்தில் பயன் பெறலாம்.காரீப், ராபி பருவ காலத்திற்கு பயிர்களுக்கு ஏற்ப கட்டண விகிதம் மாறுபடும். காப்பீடு கட்டண தொகையில் கடன் பெறும் விவசாயிகள் அனைவருக்கும் 50 சதவீத  மானியம் வழங்கப்படுகிறது. கடன் பெறும் சிறு, குறு விவசாயிகளுக்கு காப்பீட்டு கட்டண தொØகில் 55 சதவீதம் மானியமும், பிற விவசாயிகளுக்கு 50 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

நெல்லை மாவட்டத்தில் கடந்த ஆண்டு இத்திட்டத்தின் கீழ் கார் பருவத்தில் நெல் பயிர் இழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு 6.54 லட்சம் இழப்பீட்டு தொகை இந்திய வேளாண் காப்பீட்டு கழகத்தால் வழங்கப்படுகிறது. இத்தொகை பண்பொழி, இலத்தூர், தென்காசி, கல்லூரணி ஆகிய பிர்காக்களில் 201 நபர்களுக்கு வழங்கப்படுகிறது. இழப்பீட்டு தொகை 50:50 என்ற மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கப்படுகிறது.இத்தொகையில் மத்திய அரசின் பங்கான 50 சதவீதம் மற்றும் தற்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பாங்க் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 50 சதவீதம் மாநில அரசின் பங்கு தொகை விவசாயிகளின் பாங்க் கணக்கில் செலுத்தப்படும் என்று கலெக்டர் ஜெயராமன் தெரிவித்தார்.

**கால்நடை வளர்ப்பு சிறப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,02:27 IST

சங்கரன்கோவில் : சங்கரன்கோவிலில் கால்நடை வளர்ப்பு குறித்து விவசாயிகள் பயிற்சி நடந்தது.சங்கரன்கோவில் ஒன்றிய வேளாண்மைத்துறை சார்பில் கரிவலம்வந்தநல்லூர் கால்நடை மருத்துவமனையில் கால்நடை வளர்ப்பு குறித்து விவசாயிகள் பயிற்சி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் முகம்மது காசிம் வரவேற்றார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் துரைப்பாண்டியன் கால்நடை வளர்ப்பின் முக்கியத்தும் மற்றும் புல் வளர்ப்பு பற்றி பேசினார். கால்நடை உதவி இயக்கனர் சங்கரசுப்பிரமணியன் இப்பகுதிக்கு ஏற்ற ரகங்கள் பற்றி பேசினார். கால்நடை உதவி மருத்துவர்கள் செல்வராஜ், முருகன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் காளிமுத்து, உதவி வேளாண்மை அலுவலர்கள் குமரேசன், சுரேஷ்குமார் செய்திருந்தனர்.

**தமிழகத்தில் ஐந்து தென் மாவட்டங்களில் மீண்டும் ஜே-13 நெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,00:00 IST




மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தற்போது மழை பெய்து வருகிறது. ஆங்காங்கே இருக்கும் சிறிய கண்மாய்களில் நீர் தேங்கியுள்ளது. மேலும் வைகை அணையில் ஓரளவு நீர்மட்டம் அதிகரித்துக்கொண்டு இருக்கிறது. விவசாயிகள் 1,45,000 ஏக்கர் பரப்பில் தங்கள் நிலங்களை தயார் செய்துகொண்டு இருக்கிறார்கள். தென் மாவட்டங்களில் நாற்று நடும் பணிகளும் துவங்கியுள்ளன. அதோடு ராமநாதபுரம் மாவட்ட

விவசாயிகள் நேரிடை நெல் (பொடி நெல் சாகுபடி) விதைப்பிற்காக தங்கள் நிலங்களை தயார் செய்துகொண்டு இருக்கிறார்கள். பருவமழை தாமதமான காரணத்தால் விவசாயிகள் குறுகிய கால நெல் ரகமாகிய ஜே-13 நெல்லினை அனுபவத்தின் அடிப்படையில் சாகுபடிக்கு தேர்ந்தெடுத்துள்ளனர். அனுபவத்தில் பின்பட்ட சாகுபடிக்கு (புரட்டாசி பட்டம்) ஜே-13 ஏற்றது என்பது தெளிவாகியுள்ளது. மதுரை, திண்டுக்கல் மற்றும் காந்திகிராமத்தைச் சுற்றிலும் வறட்சி நிலையில் ஜே-13 கணிசமான அளவு மகசூல் கொடுத்துள்ளது. சேலத்திற்கு அருகிலுள்ள தர்மபுரி இந்த மாவட்டத்தில் காட்டாம்பட்டி கிராமத்தில் புரட்டாசியில்தான் நெல் சாகுபடி செய்ய இயலும். புரட்டாசியில் பெய்யும் மழை சாகுபடிக்கு உதவுகின்றது. தமிழகத்தில் ஜே-13 அரிசி இட்லி செய்யவும் பொரி செய்யவும் உதவுகின்றது. ஜே-13 மிக சன்ன ரக நெல்லினைக் கொண்டது. அதனால் இந்த ரகம் குச்சி நெல் என்றும் அழைக்கப்படுகின்றது. ஜே-13 சாகுபடிக்கு குறைந்த செலவே ஆகின்றது. சாகுபடிக்கு ஒரு சென்ட் நாற்றங்கால் தயார் செய்யப்படுகின்றது. நாற்றங்காலுக்கு 100 கிலோ மக்கிய தொழு உரம் இடப்படுகின்றது. உரத்தோடு 2 கிலோ டி.ஏ.பி. உரம் இட்டு உழவு செய்யப்படுகின்றது.

விதை நெல் நாற்றங்காலில் டிசம்பர் மாதம் விதைக்கப் படுகின்றது. நடவு வயலுக்கு தொழு உரம் இரண்டு டிரெய்லர் லோடு இடப்படுகின்றது. கடைசி உழவில் 17:17:17 காம்ப்ளக்ஸ் உரம் ஒரு மூடை (50 கிலோ) இடப்படுகின்றது. வயலில் பரம்படிக்கும்போது இரண்டரை கிலோ நுண்ணூட்டச் சத்துக்கள் மணலுடன் கலந்து நடவு வயலில் தூவப்படுகின்றது. நடவு வயலில் களையை கட்டுப்படுத்த ""ரீபீட்" என்ற களைக்கொல்லி 250 மில்லி அளவினை மணலுடன் கலந்து 50 சென்ட் பரப்பில் இடப்படுகின்றது. பயிர் நடவு செய்த பத்தாம் நாள் யூரியா 15 கிலோவினை 3 கிலோ வேப்பம் பிண்ணாக்குடன் கலந்து ஒரு முறையும் நடவு நட்ட 25ம் நாள் இரண்டாவது தவணையாகவும் மேலுரமாக 10 கிலோ யூரியாவுடன் இரண்டு கிலோ வேப்பம் பிண்ணாக்கு கலந்து இடப்படுகின்றது. பயிர் வயது 99 நாட்களாக இருக்கும்போது அறுவடை செய்யப்படுகின்றது.
அறுவடையில் 50 சென்ட் பரப்பில் 17 மூடைகள் மகசூலாக கிடைக்கும். அரை ஏக்கர் சாகுபடிக்கு செலவு ரூ.3,735 ஆகும். மூடை ரூ.600 வீதம் 17 மூடை நெல்லின் மதிப்பு ரூ.10,200. சாகுபடி செலவு போக அரை ஏக்கரில் லாபம் ரூ.6465 கிடைக்கும். ஜே-13 சாகுபடியில் செலவு குறைவு. சாகுபடியில் கணிசமான லாபம் விவசாயிகளுக்கு கிடைக்கும். ஜே-13 செம்மை நெல் சாகுபடி முறையிலும் (ராஜ ராஜ சோழன் 1000) மகசூலினை அள்ளித்தந்துள்ளது. ஜே-13 நெல்லை ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயிகள் நேரிடை விதைப்பிற்கு உபயோகிக்கின்றனர். மிக சன்னமான நெல்லாகிய ஜே-13, குச்சிநெல் என்று அழைக்கப்படுகின்றது. சாகுபடியில் ஏக்கரில் 40 (மூடை 61 கிலோ) மூடை வரை மகசூலும் கிடைக்கும் (மழை பொய்க்காமல் பெய்தால்).
**-எஸ்.எஸ்.நாகராஜன்**

## பெரியாறு வைகை பாசனப்பகுதியில் பசுந்தாள் பயிர்கள் சாகுபடி

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,00:00 IST

கோடை மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் பசுந்தாள் பயிர்கள் சாகுபடி செய்து பலன் பெறலாம். கிணற்றுப் பாசன வசதியுடைய விவசாயிகள் தாராளமாக பசுந்தாள் பயிரிட்டுப் பின்னர் வயலில் அமிழ்த்தி மிகுந்த பயனடையலாம். பசுந்தாள் பயிர்களில் தக்கைப்பூண்டு, சணப்பு முக்கியமானவை.

**நன்மைகள்:** பசுந்தாள் பயிர்களின் வேர்களில் உள்ள வேர் முடிச்சுகள் ஆகாயத்தில் உள்ள தழைச்சத்தை நிலைநிறுத்தி மண்ணிற்கு வழங்குகின்றன. இதனால் மற்ற பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்தை இப்பயிர்கள் தருகின்றன. நெல் சாகுபடிக்கு முன் பசுந்தாள் பயிர்கள் சாகுபடி செய்வதால் நெல்லுக்குத் தேவையான தழைச்சத்தில் சுமார் 25 சதவீதம் மிச்சமாகிறது. மண்ணின் இயற்பியல் தன்மைகள் பயிர் சாகுபடிக்குச் சாதகமான முறையில் மண்ணில் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் கிடைக்கப் பெறுவதால் மண்வளம் கூடுகிறது. மண்ணின் நுண்ணுயிர்கள் பெருகி உயிரியல் தன்மை மேம்படுத்தப்படுகிறது. களைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இயற்கை விவசாயத்திற்குப் பசுந்தாள் பயிர்களே அடிப்படையானவை. தக்கைப்பூண்டு களர் நிலங்கள் மற்றும் நெல் சாகுபடி பகுதிகளுக்கு மிகவும் ஏற்றது.

**விதைப்பு:** தக்கைப்பூண்டு, சணப்பு போன்ற பசுந்தாள் பயிர்கள் விதைப்பதற்கு நிலத்தை ஒன்றிரண்டு முறை டிராக்டர் டில்லர் கொண்டு உழவு செய்ய வேண்டும். ஏற்கனவே கோடை உழவு செய்யப்பட்டிருப்பின் நேரடியாக விதைகளை விதைத்துப் பின்னர் ஒரு முறை லேசாக உழவு செய்தால் போதுமானது. நெல் நடவு செய்வதற்கு சுமார் 40-45 நாட்கள் முன்னதாக விதைக்க வேண்டும். விதைப்பதற்கு ஏக்கருக்கு சுமார் பத்து கிலோ விதைகள் போதுமானது. நல்ல தரமான விதைகளைப் பயன்படுத்தவேண்டும்.

**பராமரிப்பு:** பசுந்தாள் பயிர்களுக்குப் பராமரிப்பு சிறிதும் தேவையில்லை. கோடையில் பெய்யும் ஓரளவு மழையே போதுமானது. மழை தவறும் பட்சத்தில் ஒன்றிரண்டு தடவை நீர்ப்பாசனம் செய்யலாம். கிணற்றுப்பாசன வசதியுடைய விவசாயிகள் கட்டாயம் பசுந்தாள் பயிர்கள் சாகுபடி செய்து உயர்ந்த பலனைப் பெறலாம். தற்போது விதைப்புக்கு ஏற்ற தருணம்.

**கவனிக்க வேண்டியவை:** ஏக்கருக்கு பத்து கிலோ விதை உபயோகித்தல். விதைத்த சுமார் 40-45 நாட்களில் நிலத்தில் அமிழ்த்துதல். அமிழ்த்திய தழையுடைய வயலில் குறைந்தது ஏழு நாட்கள் தண்ணீர் கட்டி மக்க வைத்தல்.

**மண்ணில் அமிழ்த்துதல்:** பசுந்தாள் பயிர்கள் சுமார் 45 நாட்களில் நன்றாக வளர்ந்து மண்ணில் அமிழ்த்த தயாராகிவிடும். இக்காலங்களில் அவை பூக்கும் தருணத்தில் இருக்கும். பசுந்தாள் விளைச்சல் ஏக்கருக்கு 10 முதல் 15 டன்கள் வரை கிடைக்கும். நெல் நடவுக்கு சுமார் 10 நாட்கள்

முன் தண்ணீர் பாய்ச்சி டிராக்டர் கேஜ்வீல் கொண்டு இருமுறைநன்கு உழவேண்டும். இதனால் பயிர்கள் மண்ணில் மூழ்கி நன்கு அமிழ்த்தப் படுகின்றன. பின்னர் நடவு நாள் வரை வயலில் தண்ணீர் கட்டி தழைகள் நன்றாக மக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். குறுவை நெல் சாகுபடி நடவுக்கு முன்னர் பசுந்தாள் உரப்பயிர்களை விதைத்து மடக்கி உழுது பயிருக்கு இடவேண்டிய இயற்கை உரத்தை அளிக்க முடியும்.

ரா.பாலசுப்பிரமணியன் மற்றும் ரா.வீரபுத்திரன்,உழவியல் துறை, வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 06,2010,00:00 IST



**தாவர நூற்புழுக்கள் மேலாண்மை**

தாவர நூற்புழுக்கள் மேலாண்மை: நாற்றங்கால்: மண் வெப்பமூட்டடல்: சூரிய வெப்பம் அதிகமாக உள்ள மார்ச் முதல் ஜூன் மாதங்களில் 8 காஜ் பருமனுள்ள நிறமற்ற பாலிதீன் கொண்டு 25-40 நாட்களுக்கு மூடிவைத்தல். நூற்புழுக்களைத் தாங்கி, எதிர்த்து வளரும் தன்மையுடைய வகைகளைத் தேர்வு செய்தல்.

**விதைநேர்த்தி செய்தல்:** ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் அல்லது 4 கிராம் டிரைகோடெர்மா விரிடியை பயன்படுத்துதல்; வேர் உட்பூசணத்தை நாற்றங்காலில் சதுரமீட்டருக்கு 100 கிராம் வீதம் இடுதல்; நாற்றங்காலில் கார்போபியூரான்-ஜி குருணை மருந்தினை சதுரமீட்டருக்கு 10 கிராம் இடுதல்.

**வயல்வெளி:** கோடை உழவு: வயலை 2-3 முறை ஆழ உழவு செய்தல்.

**நூற்புழுக்களை கவர்ந்திழுக்கும் பயிர்கள்:** தட்டைப்பயிரை, பயிர் சாகுபடிக்கு முன் விதைத்து மண்ணிலுள்ள நூற்புழுக்கள் அப்பயிரால் கவர்ந்திழுக்கப்பட்ட பிறகு ஒரு மாதத்திற்குள் அப்புறப்படுத்தலாம்.

**நூற்புழுக்களை அழிக்கவல்ல பயிர்கள்:** கேந்தி, கடுகு போன்ற பயிர்களின் வேர்ப்பகுதியிலிருந்து வெளிப்படும் கசிவுப்பொட்கள் அழிக்க வல்லது. எனவே இப்பயிர்களை ஊடுபயிராக பயிர் செய்வதன் மூலம் நூற்புழுக்களை வெகுவாக கட்டுப்படுத்தலாம்.

வயலில் நீரைத் தேக்கிவைத்தல்: நன்செய் நிலங்களில் சாகுபடிக்கு முன்பாக சுமார் 3-4 மாதங்கள் நீரைத் தேக்கி வைக்கும்போது ஏற்படும் வேதியியல் நுண்ணுயிர் மாற்றத்தினால் வெளிப்படும் நச்சுப் பொருட்கள் நூற்புழுக்களை அழிக்கும் திறன் பெற்றவை.

**பயிர் சுழற்சி செய்தல்:** தக்காளி, கத்தரி, வெண்டை போன்ற பயிர்களைப் பயிர் சுழற்சி செய்தல். பசுந்தாள் பயிர்களை சாகுபடி முறை தனிப்பயிராக வளர்த்து மடக்கி <உழுதல்.

**நூற்புழு கொல்லிகள்:** தக்காளி நாற்றுக்கள் நடவு செய்த 15 நாட்களுக்கு பிறகு கார்போபியூரான் - ஜி குருணை மருந்தினை ஏக்கருக்கு 33 கிலோ வீதம் தூவுதல்; வேப்பம் பிண்ணாக்கு, ஆமணக்குப் பிண்ணாக்கு, புங்கம் பிண்ணாக்கு ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 500 கிலோ வரை மண்ணில் இடுதல்.

**விலங்கு கழிவுகள்:** சாண எரு, ஆட்டு எரு, கோழி எரு, மீன்கழிவு, பயிர்களின் கழிவுகள், தொழிற்சாலை கழிவுகள், கரும்பாலைக் கழிவுகள் ஆகியவற்றை தேவைக்கு ஏற்ற அளவில் இடுதல். உயிரினக் கலவைக் கொல்லிகள்: ஒரு எக்டருக்கு 25 கிலோ சூடோமோனாஸ் புளூரசன்ஸ் கலவையை 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து 2 நாட்களுக்கு நிழலில் வைத்து காலை, மாலை நேரங்களில் நீர் தெளித்து பின்னர் வயலில் இடுதல்.

நூற்புழுக்களின் தாக்குதலைப்பற்றி அறிய மண் வேர் மாதிரிகளை சோதனை செய்வது அவசியம். இதற்கு தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, பெரியகுளம், மேட்டுப்பாளையம், திண்டிவனம், காஞ்சிபுரம், சிறுகமணி, கிள்ளிகுளம், கொடைக்கானல், ஊட்டி, தடியன்குடிசை ஆகிய நிலையங்களில் உள்ள நூற்புழு வல்லுனர்களை அணுகவும்.

**தகவல்: பா.வெற்றிவேல்காளை, ச.சுப்பிரமணியன், ஏ.ஜே.ஜோனாத்தான், பயிர் பாதுகாப்பு மையம், த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

*நடப்பு நிதி ஆண்டின் முதல் 5 மாதங்களில் நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 13 சதவீதம் அதிகரிப்பு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*கொச்சி*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் (ஏப்ரல் – ஆகஸ்டு) நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தை காட்டிலும் அளவின் அடிப்படையில் 13 சதவீதம் (2.01 லட்சம் டன்) அதிகரித்து 2.40 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. மிளகாய், பூண்டு மற்றும் இஞ்சி ஆகிய நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் தேவைப்பாடு அதிகரித்து வருவதே இதற்கு காரணமாகும்.*

*டாலர் மதிப்பில்...*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில், நறுமண பொருள்கள் ஏற்றுமதி டாலர் மதிப்பு அடிப்படையில் வியக்கத்தக்க வகையில் 25 சதவீதம் அதிகரித்து 45.05 கோடி டாலரிலிருந்து 56.49 கோடி டாலராக உயர்ந்துள்ளது. இது, இந்திய நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் சிறப்பான விலை கிடைத்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது.*

*நடப்பு நிதி ஆண்டில், இந்திய ரூபாய்க்கு எதிராக அமெரிக்க டாலரின் வெளிமதிப்பு மிகவும் குறைந்து வருகிறது. அதாவது, ரூபாயின் மதிப்பு உயர்ந்துள்ளது. இதனால், ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு பாதிப்பு ஏற்படும். சென்ற நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஒரு டாலரின் வெளிமதிப்பு சராசரியாக ரூ.48.60–ஆக இருந்தது. இது, நடப்பு நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் சுமார் ரூ.46–ஆக குறைந்துள்ளது. இதனையடுத்து, ரூபாய்*

மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி 19 சதவீதம் மட்டுமே அதிகரித்து ரூ.2,190.50 கோடியிலிருந்து ரூ.2,600.51 கோடியாக உயர்ந்துள்ளது.

பெருஞ்சீரகம்

முதல் ஐந்து மாதங்களில் பெருஞ்சீரகம், பூண்டு, புளி, பெருங்காயம் மற்றும் கறி மசாலா, நறுமண எண்ணெய் வகைகள், ஓலியோரெசின் உள்ளிட்ட மதிப்புக்கூட்டப்பட்ட நறுமண பொருள்கள் ஏற்றுமதி அளவின் அடிப்படையிலும், மதிப்பின் அடிப்படையிலும் சிறப்பான அளவில் உயர்ந்துள்ளது.

மிளகு – ஏலம்

அதேசமயம், மிளகு, ஏலக்காய் (சிறியது), மஞ்சள் மற்றும் புதினா போன்றவற்றின் ஏற்றுமதி மதிப்பின் அடிப்படையில் மட்டுமே அதிகரித்துள்ளது. இது, வெளிநாடுகளில் இப்பொருள்களுக்கு நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது. இந்நிலையில், ஏலக்காய் (பெரியது), சீரகம், ஜாதிக்காய் போன்றவற்றின் ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் சரிவடைந்துள்ளது.

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மிளகு ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 5 சதவீதம் குறைந்து 8,000 டன்னிலிருந்து 7,600 டன்னாக குறைந்துள்ளது. ரூபாய் மதிப்பு அடிப்படையில் ரூ.137 கோடியிலிருந்து 6 சதவீதம் குறைந்து ரூ.129 கோடியாக சரிவடைந்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மாதங்களில், மிளகாய் ஏற்றுமதி அமோகமாக 35 சதவீதம் அதிகரித்துள்ளது. நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் மிளகாய் அதிக பங்களிப்பைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பூண்டு ஏற்றுமதியில் முன்னிலை வகித்து வரும் சீனாவில், இதன் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, நம் நாட்டின் பூண்டு ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 327 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில் 688 சதவீதமும் உயர்ந்துள்ளது. சர்வதேச சந்தையில் இந்திய பூண்டின் விலை டன் ஒன்றுக்கு 2,000 டாலராக உள்ளது. அதேசமயம், சீன பூண்டின் விலை இதையும் விட அதிகமாக 2,600–3,200 டாலராக உள்ளது. இதனால், வெளிநாடுகள் இந்தியாவிலிருந்து அதிக அளவில் பூண்டை இறக்குமதி செய்து வருகின்றன.

சென்ற ஆண்டில்...

சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில் ரூ.5,560.50 கோடிக்கு 5.03 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதியாகி உள்ளன. சென்ற நிதி ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் காட்டிலும் இது அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் முறையே 16 சதவீதம் மற்றும் 24 சதவீதம் அதிகமாகும். நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் 10 முதல் 15 சதவீதம் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மதிப்பீடு

நறுமண பொருள்கள் வாரியம் பல்வேறு வகையான நறுமணப் பொருள்கள் உற்பத்தி,

*பயன்பாடு மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அடுத்த 15 ஆண்டுகளில் நாட்டின் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி 10 மடங்கு அதிகரித்து 1,000 கோடி டாலராக (சுமார் ரூ.50,000 கோடி) உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

***வெங்காயம் விலை 60 சதவீதம் உயர்வு***

*செப்டம்பர் மாதத்தில், நாடு முழுவதுமாக வெங்காயம் விலை சராசரியாக 60 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. தற்போது ஒரு கிலோ வெங்காயம் விலை சுமார் ரூ.20–27 என்ற அளவில் உள்ளது.*

*சேமிப்பு கிடங்குகள்*

*இந்தியாவில், வெங்காயம் வரத்து மிகவும் அதிகமாக உள்ள பகுதியாக மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த நாசிக் சந்தை திகழ்கிறது. பாதகமான பருவநிலையால், அங்குள்ள சேமிப்பு கிடங்குகளில் வெங்காயம் அதிக அளவில் வீணாகி உள்ளது. விலை உயர்வுக்கு இதுவே முக்கிய காரணமாகும் என்று வர்த்தக பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.*

*வெங்காயம் விற்பனையில் மிகப் பெரிய சந்தையாக திகழும் லாசால்கான் சந்தையில் வெங்காயத்தின் மொத்த விலை சென்ற ஒரு மாதத்தில் 70 சதவீதம் அதிகரித்துள்ளது.*

*விலையை கட்டுப்படுத்தும் வகையில், மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஓர் அங்கமாக, வெங்காயம் ஏற்றுமதியை கட்டுப்படுத்த மத்திய அரசு அக்டோபர் மாதத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன் ஒன்றுக்கு 75 டாலர் அதிகரித்து 425 டாலராக உயர்த்தியுள்ளது.*

*எட்டு மாதங்களில்...*

*அதேசமயம், இந்த நடவடிக்கையால் எவ்வித பலனும் ஏற்படப் போவதில்லை என்று ஏற்றுமதியாளர்களும், வர்ததக பிரமுகர்களும் தெரிவித்துள்ளனர். ஏனென்றால், வெங்காயம் ஏற்றுமதி ஏற்கனவே சரிவடைந்து வருவதாக தெரிவித்துள்ளனர். நடப்பு ஆண்டில் ஆகஸ்டு மாதம் வரையிலான எட்டு மாத காலத்தில் வெங்காயம் ஏற்றுமதி சென்ற ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 50 சதவீதம் சரிவடைந்து 87,400 டன்னாக குறைந்துள்ளது.*

***மலேசியா, சிங்கப்பூர், இலங்கை நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி எதிரொலி ஒரு கிலோ ரூ.80–க்கு விற்பனையான மலைப்பூண்டு ரூ.250 ஆக உயர்வு அரிசி, துவரம் பருப்பு விலை சரிவு***



சென்னை, அக்.6–

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதியாவதால் மலைப்பூண்டு கடந்த ஆண்டு ஒரு கிலோ ரூ.80–க்கு விற்பனையானது, ரூ.250 ஆக உயர்ந்துள்ளது. அதிக விளைச்சல் காரணமாக அரிசி, துவரம்பருப்பு விலை சற்று குறைந்துள்ளது.

ஒரு கிலோ பூண்டு ரூ.250

மருத்துவ குணம் உள்ள பூண்டுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி உள்ளது. இதனால் இந்தியாவில் பூண்டு விளைச்சலில் முதல் இடத்தில் உள்ள குஜராத் மாநிலத்தில் இருந்து மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, வங்காள தேசம் ஆகிய நாடுகளுக்கு அதிக அளவில் பூண்டு ஏற்றுமதியாகி வருகிறது. கடந்த ஆண்டு வெளிநாடுகளுக்கு 350 டன் பூண்டு ஏற்றுமதியானது, இந்த ஆண்டு 1,400 டன் ஆக உயர்ந்துள்ளது. இதனால் பூண்டு விலை இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து மாதா, மாதம் கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.20 வரை உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு ஒரு கிலோ மலைப்பூண்டு ரூ.80–க்கு விற்பனையானது, தற்போது கிலோ ரூ.250 ஆகவும், பெரிய பூண்டு கடந்த ஆண்டு கிலோ ரூ.40–க்கு விற்பனையானது, தற்போது ரூ.180 ஆகவும், 2–வது ரக பூண்டு கடந்த ஆண்டு கிலோ ரூ.30–க்கு விற்பனையானது, தற்போது ரூ.150 ஆக உயர்ந்துள்ளது. விலை உயர்வால் வீடுகளில் பூண்டு ரசம் வைக்கும் பெண்கள் தக்காளி, மிளகு ரசம், பருப்பு ரசத்துக்கு மாறிவிட்டனர்.

வேர்க்கடலை ஏற்றுமதி

இதேபோல ஆந்திரா, தமிழ்நாடு, கேரளா, மராட்டியம் ஆகிய மாநிலங்களில் விளையும் வேர்க்கடலை அரபு நாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதியாவதால், கடந்த வாரம் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.85–க்கு விற்பனையான முதல் ரக கடலெண்ணெய் ரூ.95 ஆகவும், சாதா ரக கடலெண்ணெய் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.80–க்கு விற்பனையாது, ரூ.90 ஆகவும் விலை அதிகரித்துள்ளது.

சர்வதேச மார்க்கெட்டில் விலை உயர்வால், பாமாயில் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.44–க்கு

விற்பனையானது, ரூ.48 ஆகவும், கடந்த வாரம் ஒரு லிட்டர் பாக்கெட் சன்பிளவர் ரூ.62–க்கு விற்பனையானது, ரூ.66 ஆகவும் அதிகரித்துள்ளது. ஆயுத பூஜை, தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் சூழ்நிலையில் எண்ணெய் வகைகள் விலை உயர்வு வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கப்பலில் துவரம் பருப்பு

ஆப்பிரிக்கா நாட்டில் இருந்து சென்னை துறைமுகத்திற்கு கடந்த வாரம் 2 கப்பல்களில் துவரம் பருப்பு இறக்குமதியாகி உள்ளது. இதனால் துவரம் பருப்பு மூட்டைக்கு ரூ.1000 குறைந்துள்ளது. கடந்த வாரம் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.62–க்கு விற்பனையானது, ரூ.52 ஆகவும், உளுத்தம் பருப்பு முதல் ரகம் கிலோ ரூ.80–க்கு விற்பனையானது, ரூ.75 ஆகவும், 2–வது ரக உளுத்தம்பருப்பு கிலோ ரூ.73–க்கு விற்பனையானது, ரூ.68 ஆகவும் விலை சரிந்துள்ளது. பர்மா, சீனா ஆகிய நாடுகளில் இருந்து இன்னும் ஒரு வாரத்தில் உளுத்தம்பருப்பு இறக்குமதியாக இருப்பதால் மேலும் விலை குறைய வாய்ப்பு இருப்பதாக அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

அரிசி விலை குறைந்தது

கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு தினமும் 300 முதல் 500 லாரிகளில் அரிசி வரத்து உள்ளது. மேலும் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் நெல் அறுவடை நடந்து வருவதால், அரிசி விலை சற்று குறைந்து உள்ளதாக அரிசி வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

25 கிலோ டீலக்ஸ் புழுங்கல் அரிசி மூட்டை கடந்த வாரம் ரூ.550–க்கு விற்பனையானது, ரூ.500 ஆகவும், அதிசய பொன்னி அரிசி 25 கிலோ மூட்டை ரூ.600–க்கு விற்பனையானது, ரூ.550 ஆகவும், முதல் ரக பாபட்லா பொன்னி அரிசி 25 கிலோ மூட்டை 800–க்கு விற்பனையானது, 750 ஆகவும், இரண்டாவது ரகம் பாபட்லா பொன்னி அரிசி 25 கிலோ மூட்டை ரூ.700–க்கு விற்பனையாது, ரூ.650 ஆகவும், வெள்ளை பொன்னி அரிசி 25 கிலோ மூட்டை ரூ.900–க்கு விற்பனையானது, ரூ.850 ஆகவும் குறைந்துள்ளது என்று அரிசி மொத்த வியாபாரி ஒருவர் கூறினார். மொத்த விலையில் அரிசி விலை சற்று குறைந்தாலும் சில்லரை கடைகளில் பழைய விலைக்கே அரிசி விற்பனையாகி வருவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்து வருகிறார்கள்.

தின பூமி

பால் கொள்முதல் விலையை உயர்த்த பால் உற்பத்தியாளர்கள் நல சங்கம் கோரிக்கை

சேலம், *அக்.5*

பால் கொள்முதல் விலையை தமிழக அரசு உயர்த்த வேண்டும் இல்லையென்றால் இன்றும்....ஒரு மாதத்திற்குள் போராட்டத்தை அறிவிப்போம் என தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

சேலம் நேஷனல் ஹோட்டலில் நேற்று காலை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்க மாநில செயற்குழு கூட்டம் நடைப்பெற்றது. இந்த கூட்டத்திற்கு மாநில தலைவர் கே.ஏ.செங்கோட்டுவேல் தலைமை வகித்தார். இதில் மாநிலம் முழுவதிலும் இருந்து நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதையடுத்து செங்கோட்டுவேல் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது.தமிழக அரசு மாதிரி கூட்டுறவு சட்டத்தை சட்டமாக இயற்ற வேண்டும். அச்சட்டத்தின் அடிப்படையில் 3 அடுக்குப் பால் கூட்டுறவுக்கு தேர்தல் நடத்தி கொடுக்க வேண்டும் என முதல்வரை கேட்டுக்கொள்கிறோம்.2009 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 ந் தேதி பால் கொள்முதல் விலை உயர்விற்கு பின் கடந்த 1 வருடத்தில் வைக்கோல், சோளதட்டை, உலர் தீவனங்கள் விலை இருமடங்கு உயர்ந்துவிட்டது. தொழிலாளர்கள் தினக்கூலியும் ரூ.200 ல் இருந்து300 ஆக உயர்ந்துவிட்டது.புண்ணாக்கு ரூ.27 ல் இருந்து 32 ஆகவும், கருக்கா தவிடு ரூ.5.50 ல் இருந்து 8.50 ஆகவும் உயர்ந்துவிட்டது. 1 லிட்டர் பால் உற்பத்தியில் கலப்ப தீவனங்கள் செலவே 70 சதவீதம் ஆகிவிட்டது. தற்போது பாண்டிச்சேரியில் ரூ.2 ம் கேரளாவில் ரூ.3 பால் கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளனர்.

எனவே தமிழக அரசும் பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.6 ம், எருமைப்பாலுக்கு ரூ.8 ம் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும்.

தற்போது கர்நாடாவில் பால் கொள்முதல் விலையை உயர்த்தாமல் பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.4.50 வரை மானியமாக வழங்குகிறார். இதற்கென அந்த அரசு ஆண்டிற்கு ரூ.100 கோடி ஒதுக்கியுள்ளது. கேரளாவில் ரூ.3.50, பாண்டிச்சேரியில் ரூ.2.50 ம் மானியத்தொதை தருகிறார்கள்.அதுபோல் தமிழக அரசும் மானியத்தொகையாக லிட்டருக்கு ரூ.4..50 வழங்க வேண்டும்.

கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி ஒன்றியத்தில் பிரத சங்கங்களுக்கு சுமார் 80 நாட்கள் பால் பணம் நிலுவை உள்ளது. சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு 50 நாட்கள் பால் பணம் பட்டுவாடா

செய்யாமல் நிலுவை வைத்துள்ளது. இதே போல் விழுப்புரம் ஒன்றியத்திலும் பால் பட்டுவாடா பணம் நிலைவையில் உள்ளது. இதையும் தீர்க்க வேண்டும். பால் கொள்முதல் விலையை உயர்த்த தமிழக முதல்வர் எங்களது சங்க மாநில பிரதிநிதிகளை அழைத்து கலந்து பேச வேண்டும். இன்று(நேற்று) நடந்த மாநில செயற்குழு கூட்டத்தில் பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்தாவிட்டால் உண்ணாவிரதம், மாவட்டம்தோறும் அரசு அலுவலகங்கள் முன்பு தர்ணா மற்றும் மறியல் போராட்டம் அல்லது சென்னையில் பேரணி நடத்தலாம் என 3 விதமான கருத்து உள்ளது. எந்த போராட்டத்தை மேற்கொள்வது என்பதை மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் செய்து எங்களது சங்க நிர்வாகிகளின் கருத்தை கேட்டு ஒரு மாதத்திற்குள் அறிவிப்போம்.

கிராமங்களில் அரசு 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் ரூ.100 கூலி தருகிறது. அந்த வருமானம் கூட பால் உற்பத்தியாளர்களுக்கு இல்லை. விவசாயிகளுக்கு இலவச மோட்டார் தருவதாக சொல்கிறார்கள். கிணற்றில் தண்ணீர் இல்லை, மின்சாரம் இல்லை மோட்டார் கொடுத்த என்ன ? பயன். மக்கள் கேட்காமலே ஒரு ரூபாய் அரிசி, கலர் டி.வி.,கேஸ் அடுப்பு என இலவசமாக தருகிறார்கள். ஆனால் பால் கொள்முதல் விலையை உயர்த்த மறுக்கிறார்கள். பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்தாவிட்டால் போராட்டம் நடைபெறும் அது பற்றி விரைவில் அறிவிப்போம். இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது மாநில பொதுச்செயலாளர் ராஜேந்திரன், சட்ட ஆலோசகர் வாழப்பாடி ராஜேந்திரன் உள்பட பலர் உடனிருந்தனர்.